**கடுகண்ணாவ நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுகண்ணாவ நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுகண்ணாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத்தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய அறிவித்தல் பதாதை வருமானம் மற்றும் நிலுவையாக முன் கொண்டு வரப்பட்ட அறிவித்தல் பதாதையில் வருமானம் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 315,500 ஆன விளம்பர பதாதை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது விளம்பர அறிவித்தல் வருமானம் தொடர்பாக நிலுவை மற்றும் முன் கொண்டு வரப்பட்ட விளம்பர பதாதை வருமானக் கணக்கு பேரேட்டில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் நிலுவை சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மொத்தம் 2,525,624 ஆன 07 நிலையான சொத்து விடயங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் இனங்காணப்பட்டு அவை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடுகண்ணாவை நகரசபை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 03 நிதி மூலங்கள் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நடப்பாண்டின் பேர்து வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 4,910,737 ஆன 07 நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்டை. | 2022 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்ட நிர்மாணங்களை மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய செய்யப்பட்ட வேலை அறிக்கையின் பிரகாரம் கிரயம் இனங்காணப்பட்டு அச்சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வெவ்வேறு சந்தர்ப்பங்களின் போது சபைக்கு உரித்தாக இருந்த ரூபா 5,022,000 ஆன 05 காணித்துண்டுகள் உட்பட 16 காணித்துண்டுகள் மற்றும் அவை அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் பரீட்சிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான ஆவணங்கள் இனங்காணப்பட்டு அவை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 104,220 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,367,771 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) வீதவரி** | | | |
| (i) | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டின் வீதவரி 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் இதற்காகத் தேவையான மாற்று வழிகளை விலை மதிப்புத் திணைக்களம் இவ்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானம்** | | | |
| | மீள்சுழற்சிப் பொருட்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 212,678 விற்பனை வருமானத்தில் 80 சதவீதம் சுகாதாரப் பிரிவின் ஊழியர்களுக்கு இடையே | நடப்பாண்டின் போது முறையான சபை அங்கீகாரம் பெற்றுக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை | ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டு சபை ஊழியர்களுக்கு மேலதிக படிகள் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஊக்குவிப்புப் படியாகக் கொடுப்பனவு செய்வதற்கும் எஞ்சிய 20 வீதம் சபை நிதியத்திற்கு அறவிடுவதற்கும் சபை தீர்மானித்திருக்கும் போது அதற்குரிய செலவினத்தைக் கருத்திற் கொள்ளாது இருந்ததுடன் ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பாக ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 12,645,152 ஆக இருந்ததுடன் அதில் 1 முதல் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால வீச்சிற்குரிய அறவிடப்படாது இருந்த மீதி ரூபா 1,889,989 ஆக இருந்தது. | ஓராண்டுக்குக் குறைந்த காலப்பகுதிக்குரிய காணப்படும் மீதிகள் ரூபா 3,908,350 தொகை அறவிடப்பட்டதாகவும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையாகக் காணப்படும் கடை வாடகை மற்றும் வாடி வீட்டுக் கட்டணங்களை அறவிடுவதற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் 03 கடைகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியத்தருகிறேன். | பெறவேண்டிய அனைத்து மீதிகளும் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | சுற்றுலா கவர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் சுற்றுலா நகரமொன்றாக மாற்றும் செயற்திட்டத்திற்காக புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 8000 அளவிலான அளவிலான உரக் களஞ்சியத்தை குத்தகைக்கு எடுக்கும் போது அதற்காக ரூபா 1,360,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்குரிய குத்தகை ஆதனம் தொடர்பாக இரு | இது தொடர்பான திட்டங்கள், மதிப்பீடு மற்றும் எடுக்கும் காலம் தொடர்பான தகவல்களை வழங்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த தகவல் கிடைத்த பின்னர் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை | முறையான உடன்படிக்கையின் பேரில் ஆதனங்களை குத்தகைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அந்த ஆதனங்களை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தரப்பினராலும் உடன்படிக்கை ஒன்றுக்கு வராமல் இருந்ததுடன் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய பயன்படுத்த முடியாத ரூபா 8,719,050 ஆன 03 மோட்டார் வாகனங்கள் 2021 நவம்பர் 29 ஆம் திகதி வரையிலும் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் ஏலத்தில் விற்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டன. | 2022.01.30 ஆம் திகதி உள்ளுராட்சி மன்றத் திணைக்களத்திற்கு மதிப்பீட்டுக் குழு ஒன்றை நியமித்துத் தருமாறு வேண்டுகோள் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | வாகனத்தைப் பயன்படுத்த முடியாது இருந்தால் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி கைதவிர்ப்பதற்கு. நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண நிச்சயமான அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த விறகு பாவிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் சுடலைச் சாலை அகற்றப்பட்டு அதற்காக உள்ளுராட்சி மன்ற அமைச்சின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் நிதி தொகையை ஈடுபடுத்தி எரிவாயு மூலம் செயற்படுத்தப்படும் சுடலைச்சாலை நிர்மாணிப்பதற்கு பொதுச்சபையால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் புதிய சுடலைச்சாலை நிர்மாண நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாது இருந்ததுடன் விறகு பயன்படுத்தி செயற்படுத்தும் சுடலைச் சாலையும் செயலற்றுக் காணப்பட்டது. | விறகு பயன்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்ட சுடலைச்சாலையை தி'ருத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடு இல்லாததால் செயற்பாடற்ற நிலைமையில் காணப்படுவதாகவும் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேசத்தின் அத்தியாவசிய சேவையொன்றாகச் செயற்படுத்தப்படும் சுடலைச்சாலையை உரிய நிலைமைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அனுமதிக்கப்பட்ட 12 பதவிகளில் 19 வெற்றிடங்களும் 02 பதவிகளில் மிகை ஊழியர்களுடன் காணப்பட்ட எண்ணிக்கை 15 ஆக இருந்தது. நிறுவனத்தின் அத்தியவசிய தேவைப்பாட்டுக்கு காணப்பட வேண்டிய பொது சுகாதாரப் பரிசோதகர் பதவி மற்றும் நூலகர் பதவிகளுக்காக ஆட்சேரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பொது சுகாதாரப் பரிசோதகர் பதவி மற்றும் நூலகர் பதவிகளில் பற்றாக்குறை இருப்பதாகவும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளது. | அத்தியாவசியப் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நள்ளாளுகையும்

### திண்மக்கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் 1 தொன் அளவிலான உக்கும் கழிவுகள் வருடாந்தம் ரூபா 243,000 கொடுப்பனவு செய்து கிரிமெட்டிய பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள தொகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன் உக்காத கழிவுகள் பேல் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 182,754 செலவில் புத்தளம் பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. நகர சபையின் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு உரிய இடமொன்று இனங்காணப்பட்டு முறைப்படி கழிவுப் பொருட்களை வெளியேற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்குத் திட்டவட்டமான இடமொன்று சபைக்கு இல்லையெனவும் காணியொன்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | திண்மக் கழிவு முகாமைத்துவம் முறையாக மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |